Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

10.11.2020 செவ்வாய்க்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## புதினம் தெரியுமோ?

ஆளையும் எழுப்பி முயலையும் எழுப்பி எல்லாத்தையும் குழப்பிற வேலைக்கு எங்கட ஓப்பினா கதைக்கிற சின்னச் சட்டாம்பியை வெல்ல ஆளே கிடையாது.

இண்டைக்கு மாமனிதர் ரவிராஜின் நினைவு தினம். அதை அனுஷ்டிக்க ரவிராஜின் வீட்டுக்காரரும், ஆதரவாளர்களும் விடிய 9.30 மணிக்கு அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்திருந்தவை. ஏற்கனவே பார்லிமெண்ட் எலக்சனில ரவிராஜ் அலை அடிச்சுத்தான் . சசிகலாவுக்கு 2

# கொரோனா சிகிச்சை நிலையம் கிளிநொச்சியில் நாளை திறப்பு



## 200 பேருக்கு ஒரே நேரத்தில் சிகிச்சை

யாழ்ப்பாணம், நவ. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் கிருஷ்ணபுரம் கிராமத்தில் கொரோனாத் தொற்று நோய்குரிய புதிய சிகிச்சை நிலையம் நாளை காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 2



## நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்த சிறுமி சாவு!!!

வவுனியா, நவ. 10

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்த குளத்தில் புதிதாக வெட்டப்பட்ட மலசலகூட குழியில் விழுந்து சிறுமி இன்று உயிரிழந்துள்ளார். அதேயிடத்தைச் சேர்ந்த 2

# தீபாவளியை வீட்டில் கொண்டாடுங்கள்

*வடக்கு மாகாண சுகாதார திணைக்களம் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், நவ. 10

எதிர்வரும் 14ஆம் திகதி தீபாவளிப் பண்டிகையை மக்கள் வீடுகளிலிருந்தே அமைதியாகக் கொண்டாடுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் 14ஆம் திகதி இந்து மக்களால் தீபாவளிப் பண்டிகை கொண் 2



# சலுகைகளால் தமிழர்களின் ஒற்றுமை குழம்பிப்போனது

*சாடுகிறார் சரவணபவன்*

கொடிகாமம், நவ. 10

தற்போதைய சூழலில் சலுகைகளால் தமிழர்களின் ஒற்றுமை குலைந்துவிட்டது. ஆனால் நாங்கள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும். மீண்டும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். மாமனிதர் நடராஜா ரவிராஜின் 14ஆம் ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 2



# மண்டைதீவில் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது காணி சுவீகரிப்பு

வேலணை, நவ. 10

யாழ்ப்பாணம் வேலனை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவில் பொது மக்களின் காணிகளை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் முயற்சி பொது மக்களது எதிர்ப்புகளையடுத்து இன்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மண்டைதீவு ஜே -7 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவுச் சந்தியில் கடற்படை முகாம் அமைந்துள்ள 2

# வெளி மாகாணங்களிலிருந்து வந்தோர் பதிவு கட்டாயம்

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 10

கடந்த 7ஆம் திகதிக்குப் பின்னர் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலிருந்து இங்கு வருகை தந்தோர் தம்மை தமது பகுதி சுகாதார மருத்துவ அதிகாரியிடம் பதிவு செய்து கொள்வது கட்டாயம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 7

# தடுப்பு ஊசியை நம்பி நடைமுறையை கைவிடாதீர்கள்!



*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, நவ. 10

கொரோனாவுக்கான தடுப்பூசி பாவனைக்கு வருவதற்கு மேலும் காலமெடுக்கும். தடுப்பூசி கிடைத்துவிட்டது என நினைத்து சுகாதார 2



# நாடாளுமன்ற அமர்வு 10 மணித்தியாலங்கள்

கொழும்பு, நவ. 10

ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு முன் வைக்கப்படும் நாளை மறுதினம் 12ஆம் திகதி புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வை முற்பகல் 10 மணி முதல் இரவு 8 மணிவரை நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு நேற்றுத் தீர்மானித்தது.

முற்பகல் 10 மணி முதல் 7

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# கொரோனா சிகிச்சை...

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்,

இந்தச் சிகிச்சை நிலையம் 200 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகளை உடையது. மத்திய சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் சிபாரிசுடன் உலக வங்கியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் தேசிய கல்வியல் கல்லூரி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் கொரோனா சிகிச்சை நிலையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இச்சிகிச்சை நிலையமானது வடமாகாணத்தின் தொற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்படும், என்றுள்ளது. (ஒ,இ)

## புதினம் தெரியுமோ

கூடின வோட்ஸ் விழுந்தது. இது அப்பவே சின்னச் சட்டாம்பிக்கு பெரிய தலையிடி. ஏனெண்டால் ஆள் மாகாண சபை எலக்சனில இந்தமுறை போட்டியிட்டால்,சசிகலாவின்ர ஆதரவில்லாட்டி வெல்லமுடியாமல் போடும். ஆனால் கடைசி வரை சசிகலா தனக்கு சப்போர்ட் பண்ண மாட்டா எண்டதும் சின்னச் சட்டாம்பிக்கு தெரியும்.

அதால இந்தமுறை ரவிராஜ் ஆதரவாளர்களின் வாக்குகளை தன்ர பக்கமும் திருப்பிறதுக்காக , தாங்கள் தான் நினைவேந்தலை ஏற்பாடு பண்ணினமாதிரி நேற்று தன்ர பேஸ்புக்கில நோட்டீஸ் ஒண்டு போட்டு நானும் ரவிராஜ் ஆதரவாளன் தான் எண்டு படம்காட்டினார். ஆனால் மாமனிதர் ரவிராஜ் குடும்பத்தினர் 9.30 நினைவேந்தலை ஏற்பாடு செய்ய, சின்னச் சட்டாம்பி குரூப், காலை 9 மணிக்கு நிகழ்வு எண்டு சொல்லி ஆக்களைக் குழப்பிட்டு, தாங்கள் கோர்ட் ஸூக்கு வேலைக்கு போட்டினமாம்.

-பட்சி

# சலுகைகளால் ...

9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் உள்ள அவரின் உருவச்சிலை முன்பாக மாமனிதர் ஞாபகார்த்த மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாமனிதர் ரவிராஜின் பாரியார் உட்பட அவரது குடும்பத்தினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணை ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன், யாழ். மாநகர சபை உறுப்பினர் வி.மணிவண்ணன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், உபதவிசாளர் அ.பாலமயூரன், மறவன்புலவு சச்சிதானந்தன் எனப் பலர் கலந்து கொண்டனர். சுகாதார நடைமுறைக்கு அமைவாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சரவணபவன், ரவிராஜ் மும்மொழிகளிலும் சரளமாகத் தேர்ச்சி பெற்றவர். இவருடைய வாழ்வு இடைநடுவில் பறிபோனதுக்கும் மும்மொழித் தேர்ச்சிதான் காரணம். சிங்கள ஊடங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி ரவிராஜ் துணிந்து பேசினார். சிங்கள மக்களுக்கு புரியும் மொழியில் எடுத்துரைத்தார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை உண்மை நிலையை சிங்கள மக்கள் புரிந்து கொண்டார்கள். அதுவே ரவிராஜ்க்கு எமனானது.

ரவிராஜுக்குப் பின்னர் பக்கம் சாராமல் மும்மொழிப் புலமையுடைவர்கள் எங்களிடம் எவரும் இல்லை. தமிழ் மக்களுக்காக முற்றுமுழுதாக அர்பணித்த அவரின் அர்பணிப்பை இன்றுள்ள இளைஞர்கள் மறக்கக்கூடாது. ரவிராஜ் இளைஞனாக இருந்து தன்னுடைய வாழ்வை தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்திருக்கின்றார். அவரின் அர்ப்பணிப்புக்கான காரணங்களை நாம் சரியா கப் புரிந்து கொள்ளவேண்டும், என்றார். (ஒ,9,131,159)

# தீபாவளியை...

டாடப்பட இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வருகின்றது. கொரோனா தொற்று நோயினால் பல இறப்புகளும் அடுத்தடுத்து ஏற்பட்டுவருகின்றன.

தீபாவளி பண்டிகைக்காக பொதுமக்கள் பெருமளவில் ஒன்றுகூடும் பொழுது இந்நோய் எமது பிரதேசத்திலும் தீவிரமாகப் பரவும் வாய்ப்புள்ளது. இத்தீபாவளிப்பண்டிகையை பொதுமக்கள் அனைவரையும் வீட்டிலிருந்து அமைதியாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதன் மூலம் உங்களையும் உங்கள் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே நாம் அனைவரும் சமூகப் பொறுப்புடன் அமைதியாக வீட்டிலிருந்து எமது இத்தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவோம், என்றுள்ளது. (ஒ,இ)



# மண்டைதீவில்...

பொது மக்களுக்குச் சொந்தமான காணியை சுவீகரிக்கும் நோக்கில் நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

காணி உரிமையாளர் மற்றும் அப்பகுதி மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் அரசியல் பிரமுகர்கள் என்று பலரும் ஒன்று திரண்டு காணி அளவீடு செய்யும் இடத்துக்கு முன்பாக எதிர்ப்பு வெளிப்படுத்தி கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் காணி அளவீடு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினரான விந்தன் கனகரத்தினம், வேலணை பிரதேச சபையின் உறுப்பினர்களான கருணாகரன் நாவலன், சிறிபத்மராசா என்று பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,20)

# நீர் நிரம்பிய குழியில்...

சத்தியசீலன் சயீவினி (வயது 6) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். பெற்றோர் வெளியில் சென்றநிலையில் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி தவறுதலாக மலசல கூடக்குழியில் விழுந்துள்ளார். சிறுமியின் உறவினர்கள் உடனடியாக சிறுமியை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் சிறுமி உயிரிழந்துள்ளார்.

மலசல கூடத்துக்காக புதிதாக வெட்டப்பட்ட குழியில் மழை நீர் நிரம்பியிருந்த நிலையில் சிறுமி அதனுள் விழுந்து உயிரிழந்துள்ளார். (ஒ,ரி3)

# தடுப்பு ஊசியை நம்பி....



பாதுகாப்பு நடைமுறைகளை கைவிட வேண்டாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு கொவிட் 19 தடுப்பூசியை வழங்க உலக சுகாதார நிறுவனம் இணங்கியுள்ளது என்றும், இவ்விவகாரத்தைக் கையாள சுகாதார நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு நேற்று அறிவித்திருந்தது.

இது தொடர்பில் வினவியபோதே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினர் மருத்துவர் ஹரித அளுத்கே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாவுக்கான தடுப்பூசி இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. அது பரிசோதனை மட்டத்திலேயே இருக்கின்றது. 7 கட்டங்களில் தற்போது 5 ஆம் கட்ட பணிகளே இடம்பெறுகின்றன. பணிகள் நிறைவடைந்ததும் அதற்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கவேண்டும். அதன்பின்னர் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

தடுப்பூசி தயாரிக்கப்பட்டகையோடு அதனை அனைவருக்கும் செலுத்திவிட முடியாது, ஆரம்பத்தில் 100 பேர், அதன் பின்னர் 1000 பேர் என்று கட்டங்கட்டமாகவே செலுத்தப்படும். அதேபோல இவ்வாறு செலுத்தப்படும் மருந்து எவ்வளவு காலப்பகுதிக்குள் தாக்குபிடிக்கும் என்பது தொடர்பிலும், அதனை மீள இயக்கவைப்பதற்கான மருந்து என பல நடைமுறைகள் உள்ளன. இவை நிறைவடைந்து தடுப்பூசி பாவனைக்கு வருவதற்கு மேலும் காலம் எடுக்கும். நாட்டில் சிறந்த முறையில் சுகாதார கட்டமைப்பை முன்னெடுத்துசெல்வ தற்கு முன்கூட்டிய ஆயத்தம் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. இதன்பிரகாரமே கொவிட் - 19 தடுப்பூசி விவகாரத்திலும் சுகாதார அமைச்சு முன்கூட்டிய நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரமே செயற்பாடுகள் இடம்பெறவேண்டும். அதற்காக சுகாதார அமைச்சர் நிபுணர்கள் குழுவொன்றை அமைத்திருப்பதை வரவேற்கின்றோம். சுகாதார அமைச்சருடன் இன்று பேச்சு நடத்தவுள்ளோம். அதன்போதும் இவ்விவ காரம் பற்றி கலந்துரையாடப்படும்.

தற்போது முன்னணியில் உள்ள தடுப்பூசி தொடர்பான தகவல்கள் சர்வதேச ஊடகங்களில் வெளியிடப்பட்டுவருகின்றன. எனவே, தடுப்பூசி கிடைத்தால் அவற்றை பாதுகாத்து, பராமரித்து வைப்பதற்கான விசேட பிரிவு அமைத்தல், பயன்படுத்தும் விதம் தொடர்பில் குழுக்களுக்கு பயிற்சி வழங்குவதல், 20 வீதத்தினரில் அதனை எந்தபிரிவினருக்கு முதலில் வழங்கலாம் என்பதை கண்டறிதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்கூட்டிய ஆயத்தம் என்பது உதவியாக இருக்கும். அதேவேளை, தடுப்பூசி தற்போது கிடைத்துவிட்டது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டிய அவசியமில்லை என்று கருதவேண்டாம். தடுப்பூசி பாவனைக்கு வர காலமெடுக்கும். எனவே, சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை தொடர்ந்தும் முறையாகவும், முழுமையாகவும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம், என்றார். (ஒ,44)

# விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை உடன் விநியோகிக்குக

## பசில் உத்தரவு

கொழும்பு,நவ.10

பெரும்போகத்துக்குத் தேவையான உரத்தை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச கேட்டுக்கொண்டார்.



உர இறக்குமதி மற்றும் விநியோகத்தை செயல்திறன் மிக்கதாக்குவது தொடர்பான கலந்துரையாடலில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ்வாண்டின் உரத்துக்கான தேவை 708,910 மெற்றிக் தொன்னாகக் காணப்படுகிறது. பெரும்போகத்துக்கு தேவையான 214,000 மெற்றிக் தொன்னில் இதுவரை 51,797 மெற்றிக் தொன் உரத்தை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை முறையாக விநியோகிப்பதற்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று தேசிய உரச் செயலகம் கலந்துரையாடலில் வெளிப்படுத்தியது.

ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கான உர விநியோகத்தில் 10 சதவீதம் அரச நிறுவனங்களினாலும், 90 சதவீதம் தனியார் நிறுவனங்களினாலும் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

உரம் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை வேண்டிய சந்தர்ப்பத்தில் கொள்வனவு செய்யக்கூடிய சூழலொன்று உருவாக்கப்படும். உரத்தின் தரம் மற்றும் கழிவற்ற உயர் தரத்திலான உரத்தை இறக்குமதி செய்வதற்கும் விசேட கவனம் செலுத்தப்படும் என்று பசில் பதிலளித்தார். என்றுள்ளது. (க-இ)



# கிராமத்துக்குள் புகும் கடல்நீர்

## மக்கள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

குருநகரில் கடல்நீர் கிராமங்களுக்குள் உட்புகுவதால் மக்கள் பெரும் அவதிநிலையை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதியில் இருந்து கடல் நீர் கிராமங்களுக்குள் புகுந்த வண்ணம் உள்ளது.

இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த கரையோர மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழையுடனான காலநிலை ஒருபுறம் இருக்க, கடல் நீரும் உட்புகுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

அசுத்தமான சூழலில் தமது அன்றாடச் செயற்பாடுகள் கழிந்த வண்ணம் உள்ளன என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து மாற்று வழியை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-25)

# நிதிக்குழு தலைவர் யாப்பா

கொழும்பு, நவ.10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா பொது நிதிக்குழுவின் தலைவராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பொது நிதிக் குழுவின் கூட்டத்தில் அநுரவின் பெயரை அமைச்சர் பந்துல குணவர்தன முன்மொழிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வழிமொழிந்துள்ளார். (எ-இ)

# வாழைச்சேனையில் ஊரடங்கு நடைமுறை

மட்டக்களப்பு, நவ.10

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தியில் மீண்டும் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொறொனா மைய அலுவலகம் நேற்றுத் திறக்கப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 48 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது. அதையடுத்து, சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கு அமைய தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. தற்போது கொரோனா மைய அலுவலகத்தை மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்திருக்கின்றோம். மாவட்டத்தில் கொரோனா தொற்று மற்றும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் இந்த மைய அலுவலகத்தால் கையாளப்படும். என்றார். (எ-இ)




# கொரோனாச் சோதனைக்கு 50,000 அன்டிஜென் கருவிகள்

கொழும்பு, நவ.10

இலங்கையில் கொரோனா வைரஸைக் கண்டறிய 50,000 விரைவான அன்டிஜென் சோதனைக் கருவிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று மருந்து உற்பத்திகள் வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்தக் கருவிகளை வாங்க அரசு ஏற்கனவே திட்டமிட்டுள்ளது என்று மருத்துவ சங்கங்கள் தெரிவித்துள்ளன என செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையில் இது குறித்து நேற்றுக் கருத்துத் தெரிவித்த சன்ன ஜயசுமன, எந்தவொரு தனியார் நிறுவனத்திடமிருந்தும் இந்த விரைவான அன்டி ஜென் சோதனைக் கருவிகளை அரசு இதுவரை கொள்வனவு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். (ற-இ)

# வடிகானில் வயோதிபரின் உடல்

புத்தளம் - சிலாபம் பிரதான வீதியின் உடப்பு சந்தியில் வடிகானுக்குள் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அங்குனவில் அக்கரவெளியைச் சேர்ந்த 65 வயதான முதியவர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதியவரின் சடலம் புத்தளம் ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை உடப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

# சிறைகளுக்குள் தொற்றைக் கட்டுப்படுத்த பரிந்துரை

கொழும்பு, நவ.10

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டமா அதிபரால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிணை வழங்கக் கூடிய கைதிகளுக்கு பிணை வழங்கலாம் என்றும், ஏனைய சந்தேகநபர்களுக்கு எதிராக, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யலாம் என்றும் சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி, அரச சட்டத்தரணி நிஷர ஜயரத்ன தெரிவித்துள்ளார். (எ-இ)

# இலங்கையில் 20 வீதத்தினருக்கு கொவிட்-19 தடுப்பு மருந்து!

கொழும்பு, நவ.10

இலங்கையின் சனத்தொகையில் 20 வீதமானவர்களுக்கு கொவிட்-19 தடுப்பு மருந்தை வழங்குவதற்கு உலக சுகாதார அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.


நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதுகுறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இதில் உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த விடயங்களை ஆராய்வதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இதற்குத் தேவையான நிதியைப் பெறுவது, தடுப்பு மருந்து பெற வேண்டியவர்களைத் தீர்மானிப்பது உள்ளிட்ட பல விடயங்களை ஆராயவுள்ளது.(ற-இ)

# தொற்றுடன் நண்பி வீட்டில் ஒளித்திருந்தவர் சிக்கினார்



கொழும்பு, நவ.10

கொரோனாத் தொற்று கண்டறியப்பட்ட பின்னரும் தனது நண்பியின் வீட்டில் தங்கியிருந்த 22 வயது இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று புத்தளம், ஆனமடுவ நிர்வாக பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். கொழும்பு, துறைமுகத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் இளைஞர் ஒருவரே இவ்வாறு நண்பியின் வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்த இளைஞர் ஆனமடுவ, மருங்கொடவில் வசிக்கின்றார். இவர் மூன்று நாள்களுக்கு முன்னர் கொழும்பில் கொரோனாப் பரிசோதனை செய்து, அதன் முடிவுகளைப் பெற்றுள்ளார். அதில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்று உள்ளதை அறிந்த போதும், அவர் புத்தளம், ஆனமடுவவில் உள்ள தனது நண்பியின் வீட்டுக்குச் சென்று மறைந்து இருந்துள்ளார்.

இந்த விடயம் கண்டறியப்பட்டு ஆனமடுவ பொது சுகாதார ஆய்வாளர்கள் சிசில் சாமரா ஹேமச்சந்திரா மற்றும் பிரியந்த சரத் குமாரா ஆகியோர் அந்த இளைஞரை சிகிச்சை மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர். தற்போது அந்த இளைஞர் புத்தளம் டான்கொடுவா மருத்துவமனையின் கொரோனாத் தொற்றுச் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்த இளைஞர் வீட்டுக்குச் செல்வதற்கு முன்னர் ஆனமடுவ சதோசாவுக்கும், வேறு கடைகளுக்கும் சென்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து ஆனமடுவ சதோச தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

மாமுனையில்

# கரையொதுங்கினர் இந்திய மீனவர்கள்

யாழ்ப்பாணம், நவ. 10

வடமராட்சி மாமுனைப் பகுதியில் 4 இந்திய மீனவர்கள் நேற்று இரவு எட்டு மணியளவில் கரை ஒதுங்கி உள்ளனர்.

இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மீன்பிடி படகில் தொழிலுக்குச் சென்ற நிலையில் ஒரு இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவும் எரிபொருள் தீர்ந்த நிலையிலும் தாம் கரையொதுங்கினோம் என இந்திய மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த இந்த நான்கு மீனவர்களும் மாமுனை பகுதியில் கரை ஒதுங்கிய பின்னர் தாமாகவே சென்று இலங்கை கடற்படையினரிடம் தகவலை தெரிவித்துள்ளனர். அவர்கள் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஓ,214)

# நட்சத்திர ஹொட்டலில் சட்டவிரோத விருந்து!

கொழும்பு, நவ.10

இலங்கையில் விமான சேவை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகிலுள்ள 5 நட்சத்திர ஹொட்டலில் சட்டவிரோதமான முறையில் விருந்து நடத்தியுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். இந்த விருந்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த விருந்து தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்திடம் சாட்சியங்கள் உள்ளன. இந்தக் ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட யுக்ரேன் விமான ஊழியர்கள் மூலம் இலங்கையில் கொரோனாப் பரவல் ஏற்பட்டது என்ற சந்தேகம் ஒன்றுள்ளது. எனவே இந்த விருந்து தொடர்பில் உடனடியாக விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். எங்கள் சங்கத்தின் ஊழியர்களுக்குத் தெரியாமல் இரகசியமாக விருந்து நடத்தியுள்ளனர். எனினும் இந்தக் குற்றச்சாட்டை ஹொட்டல் முகாமையாளர் நிராகரித்துள்ளார் - என்றார். (ற-இ)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

திருகோணமலை, நவ.10

திருகோணமலை மாவட்டத்தில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆயிரத்து 61 குடும்பங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் நேற்று வழங்கப்பட்டன.

இவ் உலர் உணவுப் பொருள்கள் கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, மூதூர், திருகோணமலை பட்டினமும் சூழல், மொரவெவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோராளவும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ( ந-46)



# போதை மாத்திரைகளை வைத்திருந்த பெண் கைது!

திருகோணமலை, நவ.10

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆயிரத்து 050 போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் நிலாவெளி, ஆத்திமோட்டை பகுதியைச் சேர்ந்தவர் (வயது33) எனத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நிலாவெளிப் பிரதேசத்தில் கடை ஒன்றை உடைத்து பொருள்களை திருடிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது திருடிய பொருள்களை வீடு ஒன்றினுள் மறைத்து வைத்திருப்பதாக சந்தேகநபர் தெரிவித்ததையடுத்து, வீட்டைச் சோதனையிட்ட போது வீட்டுக்குள் இருந்து போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் அடிப்படையில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட பெண்ணை இன்று திருகோணமலை நீதிமன்றில் நிலா வெளி பொலிஸார் முன்னிலைப்படுத்தவுள்ளனர். (ற-இ)

# ஓட்டோ விபத்து: குழந்தை சாவு

பதுளை, நவ.10

பதுளை மஹியங்கனை வீதியில் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒரு வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளதுடன், மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்தே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த ஆறு வயது குழந்தை, முச்சக்கர வண்டியின் சாரதி, அவரது மனைவி மற்றும் வேறு ஓர் பெண் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-இ)

# நாளை முதல் வழமைக்குத் திரும்பும் போக்குவரத்து திணைக்கள சேவைகள்

கொழும்பு, நவ.10

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள சேவைகளை நாளை புதன்கிழமை முதல் மீண்டும் வழமைக்குக் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல், நாரஹேன்பிட்டி மற்றும் வெரஹெர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், நாளை முதல் சேவைகள் வழமைக்கு வருகின்றன என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். அத்துடன் வெரஹெர மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் குறைந்த அளவு ஊழியர்களே பணியாற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)



## சமையல் வல்லுநர் போட்டி: கிண்ணம் வென்றார் இலங்கைச் சிறுமி

ஆஸ்திரேலியாவில் சமையல் வல்லுநர் கிண்ணத்தை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட சிறுமி ஒருவர்வென்றுள்ளார்.

“Junior Masterchef Australia 2020” என்ற போட்டியில் கலந்துகொண்ட 11 வயதுடைய ஜோர்ஜியா என்ற சிறுமி இப் பட்டத்தை வென்றுள்ளார். இதன் இறுதிப் போட்டி அவுஸ்திரேலிய தொலைகாட்சியான Network 10 இல் ஒளிபரப்பப்பட்டுள்ளது. ஏனைய போட்டியாளர்களைப் பின்தள்ளிய இலங்கை சிறுமி 25 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர் பணப்பரிசை வென்றுள்ளார்.

ஜோர்ஜியா உட்பட இறுதி சுற்றில் பங்கு பற்றியவர்களுக்கு இரண்டு பிரதான உணவுகள் தயாரிக்குமாறு கூறப்பட்டிருந்தது. அதற்கமைய ஜோர்ஜியா இலங்கையின் தேசிய பொருள்களிலான உணவுகள் இரண்டை தயாரித்திருந்தார். அதற்கு Tropical Mess எனப் பெயரிட்டிருந்தார்.

எனது பாட்டி இலங்கையராகும். அவர் எனக்கு இலங்கை உணவுகள் சமைப்பதற்கு கற்பித்தார். அதற்கமைய நான் வெற்றி பெற்றேன். வென்ற பரிசு தொகையில் உணவு தொடர்பான விடயங்களுக்கு பயன்படுத்தவுள்ளேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## சுகாதார நிலைகள் சீராகும் வரை மெனிங் சந்தை திறக்கப்படாது!

கொழும்பு, நவ.10

சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்று சுகாதார நிலைகள் சீராகும் வரை புறக்கோட்டை மெனிங் சந்தை திறக்கப்படாது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மெனிங் சந்தை திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து வர்த்தகர்கள் தமது உற்பத்திப் பொருள்களுடன் நூற்றுக்கணக்கான லொறிகளில் வருகை தந்தனர் இவர்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வருகை தந்தவர்கள் நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

## எஞ்சிய வனப்பகுதிகள் உற்பத்தி நடவடிக்கைக்கு

கொழும்பு, நவ.10

பாதுகாக்கப்பட்ட இடமாக இதுவரை அறிவிக்கப்படாத, வனப்பகுதிகளை பொருளாதார மற்றும் ஏனைய உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஏற்கனவே வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தை இரத்து செய்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட இடமாக இதுவரை அறிவிக்கப்படாத வனப்பகுதிகள், எஞ்சிய வனப்பகுதிகளாகக் கருதப்படுகின்றன. 2001 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 2001 (5) ஆம் இலக்க சுற்றறிக்கையின் அடிப்படையில், இந்தப் பகுதிகள் தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுத்து பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த சுற்றறிக்கையின் பிரகாரம், எஞ்சிய வனப்பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள இடங்களை பொருளாதார மற்றும் ஏனைய உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## காலி மீனவர்களுக்கு கட்டாய பி.சி.ஆர்

காலி, நவ.10

காலி மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சகலரும் கட்டாயம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமென, காலி மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சுகாதாரத்துறை மேற்கொண்டுள்ளது என குறித்த பிரிவு தெரிவித்துள்ளது. (ந இ)

## வெலிக்கடை சிறையில் 109 தொற்றாளர்

கொழும்பு, நவ.10

இதுவரை 109 சிறைக்கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் வெலிக்கடை, பழைய போகம்பரை மற்றும் மாத்தறை ஆகிய சிறைச்சாலைகளைச் சேர்ந்தவர்களென சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## லேடி றிஜ்வே வைத்தியசாலையில் மேலும் மூவருக்குத் தொற்று

கொழும்பு, நவ.10

கொழும்பு - லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேலும் மூவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் மற்றும் தாதிய ஊழியர் இருவர் ஆகியோருக்கே வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த சிறுவர் வைத்தியசாலையில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந -இ)

## கடுவளை மாநகர சபை சாரதிக்கு கொரோனா!

கொழும்பு, நவ.10

கடுவளை மாநகர சபையில் பணியாற்றும் சாரதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து, மாநகர சபையின் செயற்பாடுகள் நேற்று சில மணிநேரம் இடைநிறுத்தப்பட்டு, மாநகர சபை முழுவதும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது. (ற-இ)

## கொழும்பில் நாட்டாமைகள் 80 பேருக்கு கொரோனா!

கொழும்பு, நவ.10

கொழும்பு நகரிலுள்ள 400 நாட்டாமைகளில் 80 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி மருத்துவர் ருவன் விஜமுனி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்துக்குள் மட்டும் கொழும்பு மாநகர சபை பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10,000 பேருக்கு பி. சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்பட்டதில் 2,122 பேருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

# சவாலுக்கு மத்தியில் பயணிகள் பாதுகாப்பு!

*ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, நவ.10

ரயில் சேவையில் காணப்படும் குறைபாடுகள் திருத்திக் கொள்ளப்படாதுவிடின் பொதுப் பயணிகளின் சுகாதார பாதுகாப்பு சவாலுக்குட்படுத்தப்படும் என ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளுக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ரயில்களில் பயணம் செய்யும் பயணிகள் தொடர்பில் தகவல் அறிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் பயணிகள் தங்களின் சுய விபரங்களை எழுதிப் போட வேண்டும்.

பின்னர் ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் சேவையாளர்கள் தகவல்களை எண்ணிக்கைப் படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (ந -இ)

## கட்டுப்பாட்டை இழந்து கடையை மோதிய வான்

*இருவர் உயிரிழப்பு*

இரத்தினபுரி, நவ.10

பலசரக்கு கடையொன்றின் மீது வான் மோதியதில் இருவர் உயிரிழந்த சம்பவம் இரத்தினபுரி, குருவிட்ட பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. வேகமாக பயணித்த வானொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து அந்தப் பகுதியிலுள்ள பலசரக்கு கடையொன்றில் மோதியுள்ளது. இதன்போது கடையில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரும், கடையின் உரிமையாளரும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளனர். விபத்தை ஏற்படுத்திய வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (வ-இ)

## நாட்டுக்கு திரும்புவதற்கு காத்திருக்கும் இலங்கையர்கள்

கொழும்பு, நவ.10

கட்டாருக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்று தற்போது கொரோனாத் தொற்று நிலையால் அங்கு சிக்கியுள்ள 17 பேர் தங்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொரோனாத் தொற்று நிலையால் வேலை வாய்ப்பை இழந்துள்ள நிலையில், நாடு திரும்ப முடியாது கடந்த 6 மாதகாலமாக பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றோம் என அவர்கள் தெரிவித்துள்ள னர்.

தங்களின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு மீண்டும் தங்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ-இ)

## தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்குள்;
# ஊரடங்கு அனுமதிப்பத்திரம் பயன்படுத்த முடியாது!

கொழும்பு, நவ.10

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குள் பயணிக்கவோ அல்லது அங்கிருந்து வெளியேறவோ முடியாது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலும் சில நிபந்தனைகள் அடிப்படையிலும் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்காக கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து ஊழியர்களை கடமைக்கு அழைப்பதற்கு சுகாதார அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (ந-இ)

## தூதுவர்கள் நியமனங்களுக்கு நாடாளுமன்றக் குழு அனுமதி

கொழும்பு, நவ.10

இலங்கை அரசால் வெளிநாடுகளுக்கென நியமிக்கப்பட்ட ஏழு புதிய தூதுவர்களுக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் குழு நேற்று அனுமதி வழங்கியது.

இந்த அனுமதியை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்ற உயர் பதவிகள் குழு வழங்கியுள்ளது.

இதற்கமைய அஹமட். ஏ.ஜவாட் சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராகவும், அருனி ரணராஜா நெதர்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், தர்ஷன பெரேரா சுவீடனுக்கான இலங்கைத் தூதுவராகவும், எம்.கே.பத்மநாதன் எகிப்துக்கான இலங்கைத் தூதுவராகவும், எஸ்.டி.கே.சேமசிங்ஹ போலாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், சி.ஈ.சமிந்த.ஐ.கொலன்னே தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் கனடாவுக்கான இலங்கைத் தூதுவராகவும் நியமிப்பதற்கான அனுமதி இதன்போது வழங்கப்பட்டது. (ந-44)



# துப்பாக்கிச் சூடு நடத்தி கொல்லப் பார்த்தனர்

*ஜே.வி.பி.க்கு புட்டுவைக்கும் தேசப்பிரிய*

கொழும்பு, நவ. 10

*1988ஆம் ஆண்டு தேர்தலுக்காக மனுக்களைப் பெறவேண்டிய நிலையிலிருந்தோம், வேட்புமனுக்களை ஏற்றுக் கொண்டால் என்னை துப்பாக்கிச் சூடு நடத்திக் கொல்லப் போவதாக ஜே.வி.பியைச் சேர்ந்தவர்கள் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று தேர்தல் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய குற்றஞ் சாட்டியுள்ளார்.*

நான் அவர்களின் உத்தரவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் எனது இரண்டு வயது மகனைக் கொலை செய்துவிடுவோம் என்று எனது வீட்டுக்குச் சென்று மிரட்டினார்கள், எச்சரிக்கும் கடிதமொன்றையும் கொடுத்துவிட்டு சென்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். தென்னிலங்கை ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்தநாள்களில் நான் அம்பலாங்கொடைக்கும் மாத்தறைக்கும் நாளாந்தம் ரயிலில் பயணம் மேற்கொள்வேன். எனது கைப்பைக்குள் பல அச்சுறுத்தல் கடிதங்கள் காணப்படும்.

ஒருநாள் நான் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த வேளை பேருந்து சோதனைச் சாவடியொன்றில் நிறுத்தப்பட்டது. என்னிடம் ஜே.வி.பி.யின் கடிதங்கள் பல காணப்பட்டமையால் நான் அவர்களின் ஆதரவாளன் என படையினர் நினைத்தனர்.

பேருந்தில் பயணித்த ஏனையவர்களை செல்வதற்கு அனுமதித்துவிட்டு என்னைத் தொடர்ந்து விசாரணை செய்தனர். அதன் பின்னர் அவர்கள் எனது தொழில் என்னவென கேள்வி எழுப்பினார்கள், நான் உதவி தேர்தல் ஆணையாளர் எனத் தெரிவித்தேன், அதற்கு அவர்கள் ஏன் அதனை முதலில் தெரிவிக்கவில்லை என கேட்டனர்.

நான் நீங்கள் முதலில் கேட்கவில்லை என தெரிவித்தேன் அவர்கள் மன்னிப்பு கேட்ட பின்னர் என்னைச் செல்ல அனுமதித்தனர். அதன்பின்னர் அலுவலகத்துக்கு வந்த அவர்கள் மீண்டும் மன்னிப்பு கேட்டனர். என்னைக் காக்கவைத்தமைக்காக சிரேஸ்ட அதிகாரிகள் அவர்களைக் கண்டித்தனர். நான் அது எனது தவறுதான் என தெரிவித்தேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

## மாற்றுத் திறனாளிகள் தின போட்டிகளுக்கான அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.10

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு இவ் ஆண்டும் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக நிலையத்தால் மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

"நம் வாழ்க்கை நம் கையில்" என்பது போட்டியாளர்களுக்கான தலைப்பாக வழங்கப்பட்டுள்ளது. ஆக்கங்கள் மாற்றுத்திறனாளிகளை மையப்படுத்தியதாகவோ அல்லது அவர்களைத் தொடர்புபடுத்தியதாகவோ இருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஆக்கத்தினை மட்டுமே அனுப்பி வைக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு: 0212054224 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-இ)

# ஐ.பி.எல்லில் சூதாட்டம்: ராபின் மோரிஸ் கைது!



புதுடில்லி, நவ.10

மும்பை அணிக்காக முதல்தர கிரிக்கெட்டில் விளையாடிய முன்னாள் வீரர் ராபின் மோரிஸ் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். ஐ.பி.எல். தொடர் நடைபெறும்போது லட்சக்கணக்கில் பணம் வைத்து வெர்சோவாவிலுள்ள அவரது வீட்டில் சூதாட்டம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் அவர் பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# வில்லியம்சன் கவலை


புதுடில்லி, நவ.10

ஐ.பி.எல் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியிடம் தோல்வியடைந்து இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்ததை அவமானமாக உணர்கின்றேன் என்று கேன் வில்லியம்சன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லி கப்பிட் டல்ஸ் 189 ஓட்டங்கள் எடுத் தது. பின்னர் 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு டன் ஹைதராபாத் அணி களம் இறங்கியது.

இந்த அணியின் வெற்றிக்காக கேன் வில்லியம்சன் போராடி னார். ஆனால் 45 பந்தில் 67 ஓட்டங்கள் எடுத்து வெளியேறி னார். இதனால் ஹைதராபாத் அணி 172 ஓட்டங்கள் எடுத்து 17 ஓட்டங்களில் வெற்றியைத் தவற விட்டு இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வில்லியம்சன் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாதது அவமானமாக உணர்கிறேன் ஆனால், கடந்த மூன்று வாரங்களாக எங்கள் அணி வீரர்கள் விளையாடி யதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)





# டிரைல் பிளாசர்ஸ் வசம் கிண்ணம்!

புதுடில்லி, நவ.10

மூன்றாவது பெண்கள் சலஞ்ச் ரி-20 கிரிக்கெட் போட்டியில் சூப்பர் நோவாஸ் அணியை 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி டிரைல் பிளாசர்ஸ் அணி சம்பியனானது . இந்திய கிரிக்கெட் சபையின் ஏற்பாட் டில் இந்தத் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள சார்ஜாவில் நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியன் சூப்பர் நோவாஸ் மற்றும் டிரைல் பிளாசர்ஸ் ஆகிய அணிகள் மோதின. நாணயச் சுழற்ச்சியில் வென்ற சூப்பர் நோவாஸ் அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

முதலில் களமிறங்கிய டிரைல் பிளாசர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 8 இலக்குகள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது. 119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சூப்பர் நோவாஸ் அணி களமிறங்கியது.

சூப்பர் நோவாஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 இலக்குகள் இழப்புக்கு 102 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் டிரைல்பிளாசர்ஸ் அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பி யன் கிண்ணத்தைக் கைப்பற்றி யது. (ற-இ)



# ஆஸ்திரேலிய தொடரில் இடம்பிடித்தார் ரோஹித்

புதுடில்லி, நவ.10

ஆஸ்திரேலியா கிரிக்கெட் தொடருக்கான மூன்று போட்டிக ளுக்குமான இந்திய அணியில், ரோஹித் சர்மா முன்னர் இடம்பெறவில்லை.

ஆனால் தற்போது டெஸ்ட் அணியில் மட்டும் ரோஹித் சர்மா சேர்க்கப்பட்டுள்ளார். ஒருநாள் மற்றும் ரி-20 தொட ருக்கு ஓய்வு பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளதால், அவர் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ளார். (ற-இ)

# துரையப்பா அரங்குக்கு நாமல் ராஜபக்ச விஜயம்

யாழ்ப்பாணம், நவ.10

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத் துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங் களின் சமூக உள்கட்டமைப்பு மேம் பாட்டுக்குழு கூட்டத்தில் பங்கேற்க நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் நேற்றுக் காலை துரையப்பா விளையாட்டு மைதானத்தைப் பார்வை யிட்டுள்ளார். இந்த விஜயத்தில் கிரா மிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானக மகே , நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன், யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனல்ட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-20)



# வெளி மாகாணங்களிலிருந்து....

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 7ஆம் திகதிக்குப் பின்னர் வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் இருந்து வருகை தந்தவர்கள் அனைவரும் தத்தமது பிரதேசத்தில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரியிடம் தம்மை பதிவு செய்துகொள்ள வேண்டும். இவர்களை வீட்டில் சுயதனிமைப்படுத்துதலுக்கு உட்படுத்துவது தொடர்பான முடிவுகளை அவர்கள் புறப்பட்டு வந்த பிரதேசங்களின் நோய்நிலைமைகளின் அபா யங்களைப் பொறுத்து சுகாதார மருத்துவ அதிகாரி கள் தீர்மானிப்பர்.

இவ்வாறு வேறு மாகாணங்களில் இருந்து தமது பிரதேசங்களுக்கு வருகை தந்தோர் பற்றிய தகவல் களை அவர்களோ அல்லது பொதுமக்களோ தமது பிரிவு சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் அல்லது வடமாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் 24 மணிநேர அவசர அழைப்பிலுள்ள 021 222 6666 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொண்டு விவரங்களை அறியத்தர வேண்டும். இதன் மூலம் தங்களையும் சமூகத்தையும் கொரோனாத் தொற்றி லிருந்து பாதுகாக்க வேண்டிய அவசர சேவைகளை எம்மால் வழங்க முடியும். இந்நோய் எமது மாகா ணத்தில் பரவாதிருக்க எமக்கு தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்கவும், என்றுள்ளது. (ஒ,இ)

# நாடாளுமன்ற அமர்வு.....

பிற்பகல் 5 மணிவரை ஒதுக்கீட்டுச் சட்ட வரைவின் இரண்டாவது வாசிப்பு மற்றும் மூன்றாவது வாசிப்பு ஆகியன இடம்பெறும். அதனையடுத்து பிற்பகல் 5 மணி முதல் 8 மணிவரை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் யோசனை சபை ஒத்திவைப்பு பிரேரணையாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் படும். அன்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய்மூல விடைக்கான கேள்வியை எழுப்புவதற்கு நேரம் ஒதுக்கப்படாது என்பதுடன், மதியபோசன இடைவேளைக்காகவும் விவாதம் இடைநிறுத்தப் படாது.

அத்துடன் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நிதியமைச்சரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்சவால் முன்வைக்கப்படும்.

கொவிட் நெருக்கடி காரணமாக வரவு செலவுத்திட் டத்தின் இரண்டாவது வாசிப்பு மற்றும் குழுநிலை என்பவற்றை 11 நாள்களுக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என இக்கூட்டத்தில் யோசனை முன்வைக் கப்பட்டபோதும், விவாதத்துக்கு முழுமையான தினங்கள் வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சியி னர் தெரிவித்தனர்.

இதற்கமைய வரவு செலவுத்திட்டத்தின் இரண்டா வது வாசிப்பு மற்றும் குழுநிலை என்பவற்றுக்கான தினங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்ப டவில்லையென்பதுடன், எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தை நடத்தி இதுபற்றித் தீர்மானிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது. (ஒ,44)

# மீண்டும் சூகி



நைபியிடாவ், நவ.10

மியான்மாரில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களைப் பெற்று வெற்றி பெற்றுள்ளோம் என்று ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி அறிவித்துள்ளது.

தேர்தல் முடிவுகள் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத போதும், கணிப்பீடுகளின்படி தமது கட்சி 2015ஆம் ஆண்டு பெற்றதை விட அதிகளவு இடங்களில் வெற்றி பெறும் என தேசிய ஜனநாயக லீக் கட்சி தெரிவித்துள்ளது.

பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் தமக்குக் கிடைத்துள்ளன என்றும், தங்களுக்கு 377 இடங்கள் கிடைக்கும் என்றும் அந்தக் கட்சி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மியான்மார் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் 90க்கும் மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 3.7 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர் என்று அந்த நாட்டுத் தேர்தல் ஆணையம் தெரிவித்திருந்தது.

எவ்வாறெனினும், உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை முழுமையாக வெளியிட ஒரு வாரம் ஆகும் என்றும் அந்த நாட்டுத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மியான்மார் நாட்டில் பல ஆண்டுகளாக ராணுவ ஆட்சி நடைபெற்று வந்த நிலையில், 2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆங் சான் சூகி அமோக வெற்றி பெற்றார். ஆனால் அந்த நாட்டு அரசமைப்புச் சிக்கல் காரணமாக அவரால் ஜனாதிபதிப் பதவியை ஏற்க முடியவில்லை. புதிதாக உருவாக்கப்பட்ட அரசு தலைவர் பதவியையே அவர் வகித்து வருகிறார்.

கடந்த தேர்தலில் அவருக்கு அமோக ஆதரவு கிடைத்தபோதும், அவரது ஆட்சி தொடர்பாகத் தற்போது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆட்சியில் ராணுவத்தின் ஆதிக்கத்தைக் குறைத்து ஜனநாயகத்தை மேம்படுத்த அவர் தவறியுள்ளார் என்று கூறப்படுகின்றது. அத்துடன் ரோஹிங்கியா முஸ்லிம்கள் விவகாரம், நாட்டின் பொருளாதாரச் சரிவு ஆகிய வற்றிலும் ஆங் சாங் சூகி கடுமையாக விமர்சிக்கப்படுகின்றார். (வ-இ)



## கொரோனாப் பிடியில் உக்ரைன் ஜனாதிபதி!

கிவ், நவ.10

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக இப்போது தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார். ஆனால் அவர் தனது கடமைகளைத் தொடர்ந்து செய்வார் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

உக்ரைன் நாட்டில் இதுவரை 4 லட்சத்து 69 ஆயிரத்து 18 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 8 ஆயிரத்து 566 பேர் உயிரிழந்துள்ளனர்.(வ-இ)

## வளி மாசடைவால் பட்டாசுக்கு “தடா”

புதுடில்லி, நவ.10

இந்தியாவில் வளி மாசு அதிகமுள்ள மாநகரங்களில் பட்டாசு வெடிக்க தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை பட்டாசுகளை விற்கவோ பயன்படுத்தவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

டில்லி உள்ளிட்ட காற்று மாசு அதிகமுள்ள மாநிலங்களில் இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# அடங்காத ட்ரம்ப்

வொஷிங்டன், நவ.10

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் மார்க் எஸ்பரை பணிநீக்கம் செய்துள்ளார் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்.

அண்மைய காலங்களில் எஸ்பருடன் பலவிதமான முரண்பாடுகளை கொண்டிருந்த நிலையில் டிரம்ப் இந்த முடிவை எடுத்துள்ளார்.

தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தின் இயக்குநர் கிறிஸ்டோபர் மில்லர் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்படுவார் என்று அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

ஜனவரி மாதம் டிரம்ப் பதவியில் இருந்து விலகுவதற்கு முன்னர் எந்தவொரு புதிய நியமனத்தையும் செனட் உறுதிப்படுத்த வாய்ப்பில்லை. அதேவேளை, இந்த அறிவிப்பு தொடர்பில் பென்டகன் கருத்தெதனையும் வெளியிடவில்லை. (வ-இ)



## கொரோனாவோடு கொண்டாட்டம்

சென்னை, நவ.10

கொரோனாப் பரவல் இந்தியாவில் தீவிர நிலையில் உள்ள நிலையில், அந்த நாட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது தீபாவளிக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இதுதொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளன.

தமிழகத்திலும் இந்த நிலைமையே காணப்படுகின்றது. தற்போது அங்கு கொரோனாத் தொற்று தீவிரம் பெற்று உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் பொறுப்பற்று நடந்துகொள்வது தொடர்பில் பலத்த விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (வ-இ)



## கொந்தளிக்கிறது ஆர்ஜென்டினா

லண்டன், நவ.10

கொரோனாத் தொற்றை அடுத்து ஆர்ஜென்டினா அரசு அறிவித்துள்ள ஊரடங்குக் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டு மக்கள் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

வீதிகளில் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் ஜனாதிபதி அல்பர்டோ பெர்னான்டஸுக்கு எதிராகக் கோசங்களை எழுப்பி போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆர்ஜென்டினா ஏற்கனவே கடும் பொருளாதார நெருக்கடியில் உள்ளது. கடந்த நிதியாண்டில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியால் சர்வதேச நாணய நிதியத்திடம் 5 ஆயிரத்து 600 கோடி டொலரைப் பெற வேண்டிய இக்கட்டான நிலைக்கு அந்த நாடு தள்ளப்பட்டிருந்தது.

பொருள் விலையேற்றம், மின் கட்டண மற்றும் எரிபொருள் விலையேற்றங்கள் என்பவற்றால் அந்த நாட்டு மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆண்டின் முற்பகுதியில் இருந்தே ஆர்ஜென்டினாவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது கொரோனாத் தொற்றை அடுத்து, அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ஊரடங்குச் சட்டமும் நடைமுறைப்படுத்தியுள்ளது. ஏற்கனவே நெருக்கடியில் இருந்த மக்களுக்கு இது கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. (வ-இ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 10.11.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.